உதவி அமர்வு நீதிமன்றம், மேலூர்

S.C No.946/2025

பெயர் : ராமமூர்த்தி(அ.சா.1)

தகப்பனார் பெயர் : லட்சுமணன்

கணவர் பெயர் :

வயது :64

கிராமம் : செக்கனத்துபட்டி

வட்டம் :

தொழில் :ஓய்வு பெற்ற சிறப்பு சார்பு ஆய்வாளர்

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

04.08.2026

முதல் விசாரணை **:**

ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். கடந்த 01.11.2015 அன்று இரவு சுமார் 8.30 மணியளவில் நான் மேலூர் பேருந்து நிலையத்தில் ரோந்து பணியில் இருந்தபோது என்னுடன் இரண்டு காவலர்கள் அதில் ஒருவர் பெண் காவலர் பணியாற்றி வந்தபோது ஆஜர் எதிரி பெண்களை கேலி செய்வதாக கேள்விபட்டு மேலூர் பேருந்து நிலையத்திற்கு சென்றேன். அப்போது அவரை நான் தட்டிக்கேட்டபோது அவர் என்னை தேவடியா மகனே என்று அசிங்கமான வார்த்தையால் திட்டியும் கம்பால் அடிக்க

முற்ப்பட்டார். நான் அப்போது விலகிக்கொண்டேன். மேலும் என்னை வரும் பேருந்தில் தள்ளிவிட்டார். பேருந்தானது நிறுத்தப்பட்டுவிட்டது. அப்பொழுதான் ஆஜர் எதிரியின் பெயர் சந்திரசேகர் என்று தெரியவந்தது. அவரை இரண்டு காவலர்களின் உதவியோடு நான் மேலூர் காவல் நிலையத்திற்கு அழைத்துச்சென்றேன். சாட்சியிடன் புகார் காட்டப்பட்டு சாட்சி அதைப் பார்வையிட்டு அதை தான் கொடுத்த புகார் தான் என்றும் அதிலுள்ள கையெழுத்து தன்னுடையது தான் என்று சாட்சி குறிப்பிடவே மேற்படி ஆவணம் அ.சா.ஆ.1 ஆக குறியீடுசெய்யப்படுகிறது. இது தொடர்பாக காவல் சார்பு ஆய்வாளர் பெயர் நினைவில் இல்லை விசாரணை செய்தார் நடந்தவற்றைக் கூறினேன்.

எ.த.கு.வி

சம்பவம் நடந்ததாக சொல்லப்படுகிற காலக்கட்டத்தில் தீபாவளிப் பண்டிகை என்றால் சரிதான். பேருந்து நிலையத்தில் அன்றைதினம் பண்டிகை நேரம் என்பதால் கூட்டம் மிகுந்து காணப்பட்டது என்றால் சரிதான். ஆஜர் எதிரி அன்றைய தினம் எந்த பெண்ணை கேலி செய்தார் என்றோ யார் இது தொடர்பாக யார் தகவல் கொடுத்தார் என்றோ தெரியுமா என்றால் தெரியாது. சம்பவம் நடந்ததாக சொல்லப்படுகிற 01.11.2015 அன்று நான் மேலூர் பேருந்து நிலையத்தில் ரோந்து பணியில் இருந்ததற்கான ஆவணம் எதுவும்

தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்னுடைய புகாரில் ஆஜர் எதிரி என்னை ஓடும் பேருந்தில் தள்ளிவிட்டு கொல்லப்பார்த்தார் என்று கூறுவதற்கு ஆதரமாக பேருந்து எண்ணை நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். என்னுடம் அன்றைய தினம் ரோந்து பணியில் ஈடுபட்ட இரண்டு காவலர்கள் என்னுடன் மேலூரில் ஒன்றாக பணியாற்றி வந்த காவலர்கள் என்றால் சரிதான். 2015ம் ஆண்டு காலக்காட்டத்தில் மேலூர் பேருந்து நிலையத்தில் சிசிடிவி கேமராக்கள் பொருத்தப்பட்டதா என்றால் இல்லை. சம்பவம் நடந்ததாக சொல்லப்படுகிற இடத்திற்கு அருகே கடைகள் நிறைய இருந்ததா என்றால் இருந்தது. ஆஜர் எதிரி என்னை அடித்து அவதூறாகப் பேசி பேருந்தில் தள்ளிவிட்டு கொல்ல முற்படவில்லை என்றும் நான் தான் அவர் மீது காழ்ப்புணர்ச்சி கொண்டும் ஆஜர் எதிரி  என் மீது புகார் கொடுத்துவிடுவார் என்று அஞ்சியும் நான் அவர் மீது பொய் புகார் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு ஏதேனும் எதிரியால் தள்ளிவிட்டதில் காயம் ஏற்பட்டதா என்றால் இல்லை. என்னை எத்தனை மணிக்கு சார்பு ஆய்வாளர் எங்கு வைத்து விசாரணை செய்தார் என்றால் இரவு 9.00 மணிக்கு மேலூர் காவல் நிலையத்தில் வைத்து விசாரணை செய்தார்.

நீதிமன்ற கேள்வி

இந்த வழக்கில் பயன்படுத்தப்பட்டதாக சொல்லப்படும் கம்பை நாங்கள் பறிமுதல் செய்தோமா என்றால் இல்லை.

SAMUNDESWARIPRABHA

Digitally signed by SAMUNDESWARIPRABHA
Date: 2026.08.04 18:35:39 +0530

Sub Judge
Melur